**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No.423/2019**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ஆம் நாள் **ம.சா.2** சாட்சி **திரு.நாகமணிகண்டன்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | **திரு.நாகமணிகண்டன்** | வயது : | |
| த/பெ : | | சாதி : | |
| கிராமம் : | | சமயம் : | |
| தாலுக்கா : | | தொழில் : | |

**ம.சா.2: முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் MCOP No.183/2020ல் மனுதாரர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.11** ஆகவும், மருத்துவ குறிப்புகள் (எண்ணிக்கை 4) அசல் **ம.சா.ஆ.12** ஆகவும், மருத்துவபில்கள் (எண்ணிக்கை 15) அசல் **ம.சா.ஆ.13**

ஆகவும் (ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது), மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.14** ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ.15** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்தவுடன் பல்லடம் மருத்துவமனைக்கு அடிபட்டவர்கள் சென்றோம் என்றால் சரிதான். விபத்து குறித்து மருத்துவர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். பல்லடம் அரசு மருத்துவமனையில் இருந்து எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். காயம் ஏற்பட்டதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்த விபத்தினால் ஏற்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்டது. வேறு விபத்தில் அடிபட்டதை இந்த விபத்தில் ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் இந்த காயங்கள் இந்த விபத்தில் ஏற்பட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து குறித்து போலீஸில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் பக்கத்தில் உள்ளவர்கள் கொடுத்தார்கள். அந்த ம.சா.ஆ.1ஆன புகாரில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் உள்ளது. ம.சா.ஆ.1ல் கலைவாணி, செல்வி, சுதா, தபசுமணி,

அனிதா, சித்ரா, மகாலட்சுமி, ஜெயச்சித்ரா, சத்தியப்பிரியா, சுதா, மணிமேகலை ஆகியோர்களின் பெயர்கள் மட்டும் தான் உள்ளது என்றும், என்னுடைய பெயர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. ம.சா.ஆ-11 முதல் 13 வரை அனைத்தும் தனியார் மருத்துவமனையில் பெறப்பட்ட ஆவணம் என்றும், அந்த ஆவணத்தில் எந்த இடத்திலும் பல்லடம் அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் காயச்சான்றிதழ் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-11ஆன டிஸ்சார்ஜ் சம்மரியில் எனக்கு எவ்விதமான கொடுங்காயங்களோ, சுயநினைவு பற்றியோ குறிப்பிடப்படவில்லை என்றும், நான் நன்றாக உள்ளதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் சமயத்தில் வாகனத்தில் இருபது பேர்கள் சொன்றோம் என்றால் இல்லை. எத்தனை பேர்கள் சென்றோம் என்றால் 15 பேர் இருக்கும். அந்த வாகனத்தின் ஓட்டுநர் உட்பட 14 பேர்கள் தான் பயணம் செய்யக்கூடிய வாகனம் என்றும், அளவிற்கு அதிகமாக நான் பயணம் செய்ததினால் காப்பீட்டு நிபந்தனையை மீறப்பட்டுள்ளதால் இந்த காப்பீட்டு நிறுவனம் எனக்கு ஏதேனும் நஷ்ட ஈடு வழங்கும் பட்சத்தில் இந்த காப்பீட்டு நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தின் 3ம் நபர் காப்பீட்டு பொருப்புறுதி பிரிமியத் தொகை

மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதால் காப்பீட்டு நிறுவனம் எனக்கு நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய தேதியில் சொல்லக்கூடிய வாகனத்தில் தான் காயம் ஏற்பட்டது என்பதை தெளிவாக சொல்லக்கூடியது என்னுடைய கடமை என்று சொன்னால் இந்த விபத்தில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது. இந்த விபத்திற்கும், இந்த வாகனத்திற்கும், எவ்வித சம்பந்தமும் இல்லாததனால் இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.